13.07.2026.
O.S.No. 62/2024
DW2– முகம்மது இஸ்மாயில் – த/பெ. முகம்மது தீதார்
Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.07.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. பிரதிவாதி அழைத்தன்பேரில்தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாய்க்காலுக்கு மேல்பக்கம் அப்துல்ரகுமான் என்பவர் வயல் உள்ளது, அதற்கு அடுத்த மேல்பக்கம் அப்பாஸ் வயல் உள்ளது. வாய்க்காலுக்கு கீழ்பக்கம் அலிபா மகன் சாகுல்ஹமீது என்பவர் வயல் உள்ளது. வாய்க்கால் எந்த சர்வே எண்ணில் செல்கிறது என்றால் எனக்கு தெரியாது. வாய்க்காலின் அகலம் 3 அடி, நீளம் 400 முதல் 500 அடி இருக்கும்.

2. வாய்க்கால் புலவரைபடத்தில் துலங்குமா என்றால் நான் புலவரைபடத்தை பார்த்ததில்லை. வாய்க்கால் வாதியின் நிலத்தில் உள்ளதா அல்லது மேற்குபக்கமுள்ள நஞ்சையில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

3. செங்குளத்துபுரவு நடுமடையில் 3 வாய்க்கால் உள்ளது. தபசில் வாய்க்கால் மேற்கிலிருந்து வரக்கூடிய வாய்க்காலாகும். நான் சொல்வதுபோல் வாய்க்கால் இல்லை என்றும், நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/– K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**